அருட்கவி

தணிகைவேள் பாரதியார்

இயற்றிய

# வறுமைக்கு விடைகொடுத்த ஏழேழு வெண்பா மாலை

பதிப்பாசிரியர்
டாக்டர். வே. இரா. மாதவன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பாவை வெளியீட்டகம்
தஞ்சாவூர் - 613 005

அருட்கவி

தணிகைவேள் பாரதியார்

இயற்றிய

# வறுமைக்கு விடைகொடுத்த ஏழேழு வெண்பா மாலை

பதிப்பாசிரியர்

டாக்டர். வே. இரா. மாதவன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

பாவை வெளியீட்டகம்

தஞ்சாவூர் - 613 005

☐ பாவை வெளியீடு 3. முதற் பதிப்பு : 1990

இந்நூல் கிடைக்குமிடம் :

**பாவை வெளியீட்டகம்**
சி-1, குடியிருப்பு வளாகம்
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
தஞ்சாவூர் - 613 005.

அச்சிட்டோர் : ஓம் சக்தி பிரிண்டர்ஸ், தஞ்சாவூர்.

# பதிப்புப் பாயிரம்

பொறுமைமிகப் பெற்றே பொறுக்கும் பலரின்
வறுமை விரட்டவே வந்த - நறுமையாம்
வெண்பா இலக்கியம் வேள்பார திப்பெயரோன்
பண்பாய்ப் பகர்ந்தான் பரவு. 1

சொல்லும் வறுமையைச் சொல்லாலே யோட்டியே
வெல்லும் வகையை விளக்கினான் - வல்லுநராய்ச்
சைவமும் மால்நெறியும் சாலவே ஒன்றெனச்
செய்திடுவான் பாநலம் செப்பு. 2

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படுமெனச் - சொல்லும்
அருமைபெரு வள்ளுவர்தம் ஆற்றலைப் பெற்றே
தருமிவன் பாவும் தகும். 3

தணிகைவேள் பாரதித் தத்துவன் செப்பும்
பிணிதரும் நல்குரவாம் பேயைத் - துணிவாய்
விடைகொடுத்தே அப்பால் விரட்டி அகற்றி
நடைகொள்வீர் நன்றாய் நயந்து. 4

சமயமொன் றென்னும் தனதநுப வத்தால்
அமையும் தணிகைவேள் ஆற்றும் - இமயக்
கவிதையை ஆவலுடனே கற்றுணர்ந்தா ராய்ந்தோர்
புவிதருசீர் கொள்வார் புகழ்ந்து. 5

பார்புகழும் வள்ளல் பரஞ்சோதி யாம்மைந்தன்
சீர்திகழும் இந்நூலைச் சேர்த்தச்சில் - பேர்புகழும்
வண்ணம் சிறப்பாய் வழங்கிட்டார் பல்புகழும்
திண்ணம் பெறுவார் தினம். 6

முன்செய்த நல்வினையால் முதறிஞர் வெண்பாவாய்ப்
பண்செய்த நூலைப் பதிப்பித்தார் - இன்செய்த
பாவை வெளியீட்டின் பண்பார் பணியிதனைச்
சேவை எனலாகும் சேர்ந்து. 7

**டாக்டர். வே. இரா. மாதவன்**

# சிறப்புப் பாயிரம்

சிரவையாதீனக் கவிஞர்

**புலவர் ப. வெ. நாகராசன்**

மானமே முதலா மதித்திடற் குரிய
மாண்புகள் பத்தையும் அழித்தே
ஈனமே புரியும் இழிதகை வறுமை
எதிர்நிலா தோடிடு மாறு,
வசனமே போற்றும் மாலொடு சிவனார்
வளரருள் வலியினால் விரட்டி,
ஞானமார் ஏழேழ் வெண்கவி மாலை
நலமுறப் புனைந்ததார் என்னில், 1

முத்தமிழ்த் துறைவாழ் நாற்கவிப் புலவன்
முற்படு காவிய மாகும்
மெய்த்தகை இராம காதையி னுடனே
விறல்மிகு பாரதம் பொழிவோன்;
மொய்த்திடு கூந்தல் திரௌபதி யம்மன்
முதிர்தமிழ்ப் பதிகமும் தந்தோன்;
சத்தியப் பொருளின் தாள்மற வாத
தணிகைவேள் பாரதி தானே. 2

அந்தநல் வெண்பா மாலையை இந்நாள்
அவனியோர் யாவரும் அறிய
உந்துபே ரன்பால் உரையுடன் அச்சில்
ஒளிர்தரத் தந்தநற் பண்பன்;
முந்துநூல் கற்ற முதறி வாளன்;
மொழிவலார் போற்றுநூ லாசான்;
அந்தமார் கலைஞன் மாதவக் குரிசில்
அனைவரும் போற்றவா ழியவே. 3

# வறுமைக்கு விடைகொடுத்த ஏழேழு வெண்பா மாலை

## காப்பு

பொன்னான நல்லணிகள் பூண்டவொரு வல்லபையின்
மன்னான மாதங்க மாமுகனை - முன்னாற்றி
நல்ல விடைகொடுத்தேன் நாளில் வறுமைக்கே
அல்லல் புரியுமத னால்.

## நூல்

தோன்றிய நாள்முதலாய்த் தொல்லை பலகொடுத்த
மான்றல் வறுமையினி வாழ்வையோ? - ஈன்றாளும்
தாயும் இறையாய் எனக்கிருக்கச் சற்றெண்ணி
நீயும் எனைவிட்டு நீங்கு. 1

வாலப் பருவமுதல் வந்தலைத்த நல்குரவே
கோலத் தெரிவையிடங் கொண்டானைச் - சீலத்
தகவாகப் போற்றினேன் சார்ந்த வறுமை
புகலாகா வாறுநீ போ. 2

குழைதோடு காதுகளில் கொண்டானைப் போற்றும்
விழைதோறும் என்பால் விழையேல் - விழைவாயேல்
பாணன்முன் நின்றதனைப் பார்த்தே வறுமைநீ
நாணம் உணர்ந்து நட. 3

காளைப் பருவத்தும் காட்டினாய் நின்செயலை
வேளை குறித்தே மிகப்பொறுத்தேன் - காளை
மிசையேறும் கண்ணுதற்கு மெய்யடிமை யானேன்
நசையேல் வறுமை நட. 4

காமனார் ஆட்டுங் கலகத்தும் பாங்கின்றிப்
பூமனார் மேல்பழி பூட்டினை - தாமம்
நிலவும் புனைந்தாற்கு நேர்ந்தேன் வறுமை
குலவாய் நடநீ குறித்து. 5

---

காப்பு: மன் - கணவன்; மாதங்கம் - யானை. 1. மான்றல் - மயக்கம் 2. வாலப் பருவம் - இளவயது; நல்குரவு - வறுமை. கோலத் தெரிவை - பார்வதி. 3. விழையேல் - விரும்பாதே; 4. கண்ணுதல் - சிவபெருமான்; நசையேல் - விரும்பாதே. 5. காமனார் - மன்மதன்; பூமனார் - பிரமன்.

என்பால் விழையாதே ஈன வறுமையே
அன்பால் அரனாற்கு அடியவன் - துன்பால்
வினைதேடும் செல்வர்பால் மேவே வறுமை
வினைதீரத் தேடுவார் மீண்டு. 6

பொய்களவு காமம் புரிவேனே யாயினும்
மைகளவின் கண்டன் மலரடிக்கு - மெய்கலவச்
சொன்மாலை சாத்தல் மறவேன் தொழிலறிந்தே
இன்னல் வறுமைநீ ஏகு. 7

தருமிக்குப் பொன்தந்த தாணுவை அன்பால்
ஒருமிக்கப் பாடும் உளத்தேன் - கருமிக்குப்
பாங்காகப் பாழ்வறுமை நீஏகில் சீர்தேர்வார்
தேங்காதே எல்லைநீ செல். 8

பொன்பெற்றும் சின்னப் பொலனுற்றும் அன்வழியில்
அன்புற்றும் ஈயார் அவர்கள்பால் - முன்புற்று
நீவாழ் வறுமையே நீள்சடையோன் தொண்டன்என்
பாவால் விடைகொடுத்தேன் பார்த்து. 9

இன்னும் பலஉழிகள் உண்டுனக் கோதாய்ப்
பன்ன எளிதல்ல பார்க்குங்கால் - உன்னி
எனைவிட்டு நீங்கே வறுமையே ஈசன்
கனையடியைக் கைகூப்பக் கண்டு. 10

உள்ளப் பொருளிருக்க ஓதாது மூரல்செய்
கள்ளப் புலவர்பால் காணும்நீ - வள்ளல்
இறையான நம்பனை ஏத்திடும் என்பால்
உறையேல் வறுமைநீ ஓடு. 11

சிவனருள் மாலருள் செவ்வேள் கரியின்
தவனலம் தானிருக்கச் சார்பில் - அவநிலைக்
கொண்டோர்பால் ஏகு வறுமைநீ கூறினேன்
தொண்டானேன் நம்பன்சீர் சூழ்ந்து. 12

---

7. மைகளவின் கண்டன் - நீலகண்டன்; ஏகு - போ. 8. தாணு - சிவபெருமான். 9. பொலன் - மேன்மை. 10. உழிகள் - இடங்கள் 11 மூரல்செய் - முறுவலிக்கும்; நம்பனை - சிவபெருமானை: உறையேல் - இருக்காதே.

முன்னூல் பழிப்பர் மொழிகலை வாணரை
உன்னார் பழிப்பர் உதவாதார் - அன்னோர்
தகைகாண ஏகிச் சார்வாய் வறுமை
பகைகாயும் நம்பன்சீர் பார்த்து. 13

குழையாடுங் கூத்தனை கூற்றை உதைத்தோன்
மழையாளை வாமத்தே வைத்த - விழைவனை
உட்கொண்ட தொண்டனெனை உன்னேல் வறுமைபொய்க்
கட்கொண்டார் பாலேகிக் காண். 14

விளவின் கனிநாணும் வெம்முலையாள் பாகன்
அளவில் வனப்புடைய அண்ணல் - உளமது
தான்மகிழச் சாற்றுவேன் கேளாய் வறுமைநீ
நான்விடை தந்தேன் நட. 15

பலரென்னை ஏசவும் பாங்கில்லார் பேசச்
சிலரென்னைத் தூற்றவே செய்து - நலமொன்றை
மூடினை யாரறிவார் முத்தனார் தொண்டனைவிட்டு
ஓடுநீ புல்வறுமை ஓர்ந்து. 16

ஏனம் எகினமும் சீர்காணச் செய்தவனை
ஞான உருவுடைய நாயகனை - யானினிப்
பொற்கவியால் போற்றப் பொருந்த உழியில்லை
நிற்காதே பாழ்வறுமை நீங்கு. 17

தெய்வம் இலையென்று செப்புவர் நல்லரே
தெய்வம் உளதென்று சீர்பேசிச் - செய்யப்
பொருளிருந்தும் ஈயார்பால் புக்கு வறுமை
அருளிறைவன் தொண்டனுரை யால். 18

தேனிதழி ஆர்புனலும் நற்பிறையும் சேர்ந்தவனை
மானைத்தன் வாமத்தே வைத்தவனை - ஞானிதனைக்
கூட்டாரும் போற்றும் குரிசிற்குத் தொண்டனுரைப்
பாட்டால் வறுமை பற. 19

---

14. உன்னேல் - நினைத்தும் பார்க்காதே. 16 ஓர்ந்து - தெளிந்து. 17. உழியில்லை - இடமில்லை. 18. புக்கு - புகு என்பதன் விரித்தல் விகாரம். 19. புனல் - கங்கை; வாமம் - இடப்பக்கம்; குரிசில் - பெருமையிற் சிறந்தோனாகிய சிவன்.

பாழாம் வறுமையே உன்னாலே பாட்டுநலம்
வாழா திடர்செய்தாய் வையத்தே - ஏழாம்
அரிவையர்க்கு நம்பன் அழகனைப் பாடும்
பரிவினன் சொன்னேன் பற. 20

வெண்ணீற்றுக் கோலத்தான் வெள்விடை ஏறுவானை
உண்ணீர்மை யாலே உறவைத்தேன் - கண்ணேறு
காட்டாய் வறுமையே காண்பொருள் பெற்றார்பால்
பாட்டாய்ப் படித்தேன் பற. 21

வறுமையே என்பால் வளர்ந்ததால் வையம்
சிறுமையே கொண்டதைச் சிந்தி - வெருவி
விடைகொடுத்தேன் செல்லே விடையன் திருமால்
நடைமுறை சொல்வேன் நயந்து. 22

நல்குரவே உன்னாலே நான்பட்ட துன்பமெலாம்
சொல்குவதும் அல்லல் துயரறவே - மல்குவளம்
தாம்பெறவே நம்பன் தனிப்பாதம் போற்றுவன்
தேம்பாய் வறுமைநீ செல். 23

முத்துமணிக் கோவைமுதல் மூரிகடன் மெய்யுடையான்
நத்துபல பூணணிகள் நண்பாக்கி - அத்தன்
இடபாகம் வாழ்வாட் கிறைவற் கடியேன்
இடமில்லை பாழ்வறுமை ஏகு. 24

தேவாரம் பாடும் செழுநாட்டில் எங்கெங்கும்
பாழ்வாரம் பாடும் பனிப்பர்பால் - நீவாழ
வாறுரைத்தேன் தாழ்செய் வறுமையே ஆறணிந்து
ஏறுகந்தான் சொற்கண் டினிது. 25

மூவர் முதுமொழியும் முன்போல யானாற்ற
ஆவல் வகையடக்கி ஆற்றுவதால் - பாழ்வறுமை
தாயேபோல் நம்பனைச் சாற்றுவன் ஈயார்பால்
நீஏகி வாழ்வதே நேர். 26

---

22. வெருவி - அஞ்சி. தேம்பாய் - அழாதே. 26. மூவர் - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்.

மூவேந்தர் இல்லை முடியாட்சி தானில்லை
பாவேந்தர் தாமிருந்தும் பாங்கில்லை - நாவேந்தற்கு
ஆகிய நம்பனை யானாற்றப் பாழ்வறுமை
ஏகிடு துன்பத்தோ டின்று. 27

கேட்காத பேர்களையும் கேட்டும் பயனில்லா
வாட்டமே செய்தாய் வறுமைநீ - பாட்டாலே
கன்னியோர் பாகன் கழல்தொழும் யான்சொல்ல
உன்னுவையோ ஓடுநீ ஓடு. 28

பாராட்டும் சீராட்டும் பண்பிலர்க்கே செய்வோர்பால்
போராட்டம் காட்டிப் புகுவறுமை - காராட்டம்
சேர்ந்து நலமழைபெய் தேசத்தில் நம்பனைச்
சார்ந்துரைக்கும் தொண்டன்சொற் சார்ந்து. 29

பயனில்லாப் பாழ்ப்பணத்தைப் பாரிடத்தே சேர்த்த
பயனில்லார் பக்கம் படரு - வயனில்லான்
நாவிருந்து நம்பனையே நான்நாடி நன்குரைக்க
நீவிருந்தோ பாழ்வறுமை நீங்கு. 30

மேன்மைகளைத் தாழ்வாக்கித் தாழ்வுகளை மேலாக்கி
வீண்வகையை மேலாக்கும் வீணர்பால் - பான்மையெனச்
சென்றுறைவாய் பாழ்வறுமை சென்னிமதி சூடியை
என்றுமுரை சொல்வன் இனிது. 31

பிறமொழிப் பாங்கில் பிணங்கிக் கிடப்போர்
திறமொழித் தெய்வந் தெரியார் - வறுமை
அவண்நோக்கி நீசென் றணுகினால் தேர்வார்
சிவன்தொண்டன் செப்பவே செல். 32

திருப்பாவை எம்பாவை ஒன்றென்றே செப்பி
அருட்குறித் தாற்றாத அன்னோர் - பொருட்தெரிய
நீசெப்பி வாழ்வை வறுமையே நீள்சடையோன்
பாசெப்ப நில்லாய் பற. 33

---

27. நாவேந்தர் - அப்பர்; நம்பனை - சிவபெருமானை.
28. உன்னுவையோ - நினைப்பாயோ. 29. கார் - மேகம்.

பாழ்வறுமை நீசெய்த பாங்கால் படிறுரைக்கும்
தாழ்வர்பால் கேட்டும் சலுகைஇலை - வீழ்வழிக்கே
ஈவார்பால் நீவாழ் இறைவனின் தொண்டன்நான்
பாவால் உரைத்தேன் பற. 34

செய்ந்நன்றி போற்றுவன்பால் சேர்ந்தால் அதைவிடுத்துப்
பொய்ந்நன்றி பேசல் புரிவேனோ? - உய்ந்நன்றி
தான்கொடுக்கும் சாற்ற இறைவனை அஃதறிந்தும்
ஏன்குறித்தாய் பாழ்வறுமை ஏகு. 35

சீரில்லாப் புல்வறுமை செய்த பரிசெல்லாம்
காரில்லாச் செம்பயிர்போல் காட்டினவே - போரில்லா
வாறுபுரம் தீவிழித்தான் தொண்டன் அளிக்கவிடை
ஆறுபல சொன்னேன் அகல். 36

கல்விக்கும் வாழ்வுக்கும் காரணங்கள் செய்திருச்
செல்விக்கும் நீபகை செய்வதால் - புல்வெட்கத்
தாண்டு வறுமை தயங்காதே நல்லகுணம்
சான்றசிவன் தொண்டன்சொற் சார்ந்து. 37

புல்குணத்துச் செல்வரைப் போய்க்கேட்டால் அன்னவரின்
இல்குணத்தை ஓம்பி இசைக்கின்றார் - நல்குரவே
தாழ்சேரச் செய்த வறுமைநீ தாண்டிடுவாய்
தாழ்சடையோன் தொண்டனுரை சார்ந்து. 38

கற்ற கலைநயமும் காட்டுங் கவித்திறமும்
சற்றுக் கவனித்தால் சார்வையோ? - பற்றலர்
வாழ்த்த வறுமை வழிநட கண்டரனார்
வாழ்த்தை நவில்வோன் வரம்பு. 39

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகர்க்கெனவே - முன்னரவன்
செப்பிய பாங்குற்றேன் தீவறுமை செல்லுவைநீ
அப்பனரன் தொண்டனுரை யால். 40

---

36. புரம் தீ விழித்தான் - முப்புரமெரித்தான் - சிவபெருமான்.
38. புல்குணம் - இழியகுணம். 39. அரனார் வாழ்த்தைக் கண்டு நவில்வோன் எனக.

செய்ந்நன்றி காப்பர் திருந்துங் கலைகற்றோர்
பொய்ந்நன்றி காப்பர் புரிவிலார் - மெய்ந்நன்றி
காட்சி மறைப்பை கழிவறுமை நீஏகு
நீட்சடையோன் தொண்டன்சொல் நேர்ந்து. 41

பிறமொழிக்கே பேதுற்றுப் பேர்செயு மாட்சி
அறியொணா தென்னை அதனால் - வறுமையே
நீபுக்கிச் சொல்லும் நினைப்பார் சிவனரு
ளேபுக்கச் சொல்வோன் இசைவு. 42

தள்ளும் வறுமையே நீசெய் சதுரதனால்
எள்ளி எனைப்பேச விட்டனையே - வள்ளி
கணவற்குத் தாதை கழற்கடியேன் நீபோ
பணமிருந்தும் பாங்கில்லார் பால். 43

கயமையும் பொய்யும் களவும் பிறவும்
வயமார் வறுமை வளரேல் - கயவுரி
போர்த்தான்தன் தொண்டன் புகலும் விடையாலே
கோத்தேகே இன்னலெலாங் கொண்டு. 44

புல்லோர்க்குப் பாங்காகும் பொல்லா வறுமைநூல்
நல்லோர்பால் நண்ணினால் நாணுவை - சொல்லக்கேள்
நாவலன்நான் பாவலன்நான் நண்ணாதே நீஏகு
சேவலான் தாதைதிறம் தேர்ந்து. 45

நன்மையே செய்ய நனிவிருப்பம் தாரணிக்கு
புன்மை வறுமைநீ போகுவாய் - இன்மையே
இல்லாத நம்பனை ஏத்துவன் ஆதலால்
சொல்லாலே சொன்னேன் தொலை. 46

ஆகெடுவாய் பாழ்வறுமை ஆட்டுஞ் செயலறிந்தே
ஏகிட நீவிடை இட்டேனால் - பாகெனும்
சொன்மொழியாள் பாகனார் தொண்டன்நான் சொன்னபடி
இன்மையெலாங் கொண்டனைத் தேகு. 47

---

43. சதுரதனால் - சாமர்த்தியத்தால்; வள்ளி கணவன் - முருகன்; தாதை - தந்தை.

சுந்தரற்கும் பாணற்கும் சொன்னம் அளித்தவனை
வந்திக்கும் என்பால் வறுமைநீ - சிந்தியேன்
நாணுவை சொன்னேன் நடந்திடு நிற்காதே
காணுறுபா யான்உரைக்கக் கண்டு. 48

செல்ல விடைகொடுத்தேன் செல்லே துனிவறுமை
அல்லணி கண்டற்கு அடிமைநான் - நல்ல
புவிமீது நீடித்துப் பொற்புடனே வாழக்
கவிமொழிந்தேன் சீராய்க் கனிந்து. 49

## வாழ்த்து

சைவமும் வைணவமும் சாலப் புவிமீது
செய்வழி யாவும் செழித்துமே - உய்வழி
என்றும் நிலவியே ஏருடன் வாழ்கநூல்
நன்றுளதாய் நாளும் நயந்து.

வறுமைக்கு விடைகொடுத்த
ஏழேழு வெண்பாமாலை
முற்றும்

---

48. சொன்னம் - பொன். 49. துனிவறுமை - துன்பம் தரும் வறுமை.